# வரலாறு

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ஒரு மதிப்பெண்)

1. ஜெர்மனி மற்றும் இத்தாலி ஒன்றிணைக்கப்பட்ட ஆண்டு **1870**
2. சீனா அரசியல் ரீதியான சுதந்திரம் பெற்ற ஆட்சிக்காலம் **மஞ்சு ஆட்சிக்காலம்**
3. ஆங்கில கிழக்கிந்திய வணிகக்குழு தோற்றுவிக்கப்பட்ட **ஆண்டு கி.பி.1600**
4. பிரஞ்சு கிழக்கிந்திய வணிகக்குழுவை நிறுவியவர் **கால்பர்ட்**
5. சீனக் குடியரசை உருவாக்கியவர் **டாக்டர் சன்யாட்சென்**
6. உலகம் முழுவதையும் ஆதிக்கம் செலுத்தும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது எனக் கூறியவர் **கெய்சர் இரண்டாம் வில்லியம்**
7. ஜெர்மனியால் முழ்கடிக்கப்பட்ட அமெரிக்காவின் புகழ்பெற்ற வணிகக்கப்பல் **லூசிட்டானியா**
8. பொருளாதாரம் பெருமந்தம் தோன்றிய நாடு **அமெரிக்கா**
9. பாசிஸ் கட்சியைத் தோற்றுவித்தவர் **முசோலினி**
10. ஹிட்லர் வியன்னாவில் பணியாற்றியது **பெயிண்டர்**
11. இரண்டாம் உலகப்போருக்கு முக்கிய காரணமாக அமைந்த உடன்படிக்கை **வெர்சேல்ஸ் உடன்படிக்கை**
12. முதல் உலகப் போருக்குப் பின் வல்லரசாக எழுச்சி பெற்ற நாடு **ஜப்பான்**
13. இரண்டாம் உலகப் போரின் போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்தவர் **சர். வின்ஸ்டன் சர்ச்சில்**
14. பிலிட்ஸ்கிரீக் என்றால் **மின்னல் போர்**
15. ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு **1945**
16. பன்னாட்டு நீதிமன்றத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் **திஹேக்**
17. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணயம் **யூரோ**
18. 1857 ம் ஆண்டு பெரும் புரட்சியை ஆங்கில வரலாற்று அறிஞர்கள் அழைத்த விதம் **படைவீரர் கலகம்**
19. குடியானவர்கள் அதிகமாக செலுத்த வேண்டியிருந்த வரி **நிலவரி**
20. பொது இராணுவப் பணியாளர் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு **1856**



WWW.TAMILAGAASIRIYAR.COM

21. முதன் முதலில் புரட்சி வெடித்த இடம் **பாரக்பூர்**

22. சீர்திருத்த இயக்கங்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் **ராஜராம் மோகன்ராய்**

23. சுவாமி தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பட்டது **ஆரிய சமாஜம்**

24. இராமகிருஷ்ண மடத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் **பேலூர்**

25. சர்சையது அகமதுகான் தொடங்கிய இயக்கம் **அலிகார் இயக்கம்**

26. தமிழ்நாட்டின் தலைசிறந்த சமுதாய சீர்திருத்தவாதி **ஈ.வெ. ராமசாமி**

27. இந்திய சமஸ்தானங்களை இணைக்கும் பணியை மேற்கொண்டவர் **சர்தார் வல்லபாய் பட்டேல்**

28. சமய மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளால் உருவானது **தேசியம்**

29. முஸ்லீம்களுக்கு தனித்தொகுதிகளை அறிமுகப்படுத்திய சட்டம் **மின்டோ மார்லி சீர்திருத்த சட்டம்**

30. பம்பாயில் தன்னாட்சி கழகத்தை தோற்றுவித்தவர் **திலகர்**

31. சுதந்திர போராட்டத்தில் காந்திஜி உபயோகித்த புதிய யுக்திமுறை **சத்தியாகிரகம்**

32. சி.ஆர். தாஸ் மற்றும் மோதிலால் நேரு தோற்றுவித்த கட்சி **சுயராஜ்ஜியம்**

33. இரண்டாம் உலகப்போரில் இந்தியர்களை ஈடுபடுத்தியவர் **லின்லித்கோ**

34. நேரு இடைக்கால அரசை அமைக்க உதவிகோரியது **ஜின்னா**

35. இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு **ஜனவரி 26. 1950**

36. இந்தியாவின் முதல் குடியரசு தலைவர் **டாக்டர் இராஜேந்திர பிரசாத்**

37. வேலூரில் இந்திய வீரர்களை ஆங்கிலேயருக்கு எதிராக செயல்பட தூண்டியவர் **திப்பு சுல்தான் மகன்கள்**

38. வேதராண்யம் உப்பு சத்தியாகிரகத்தை நடத்தியவர் **இராஜ கோபாலச்சாரியார்**

39. வைக்கம் அமைந்துள்ள இடம் **கேரளா**

**I பொருத்துக**

1. கிளமண்சு - பிரான்சு
2. ஜெர்மைன் உடன்படிக்கை - ஆஸ்திரியா
3. ஓவரா - இரகசிய காவல்படை
4. ஸ்வதிகா - நாசி சின்னம்
5. அணு சோதனை தடைச்சட்டம் - 1963.

**II**

1. ஆர்லாண்டோ - இத்தாலி
2. வெர்செயில்ஸ் உடன்படிக்கை - ஜெர்மனி
3. டியூஸ் - முசோலினி
4. லூ.ஃ.ப்ட்வோ.ஃ.ப் - ஜெர்மனி
5. பேகம் ஹஸ்ரத் மஹால் - லக்னோ

**III**

1. லாயிட்ஸ் ஜார்ஜ் - பிரிட்டன்
2. நியூலி உடன்படிக்கை - பல்கேரியா
3. பெரும்புரட்சி - 1857
4. இந்துசமய மார்டின் லூதர்கிங் - சுவாமி தாயானந்த சரஸ்வதி
5. கேசரி - பாலகங்காதர திலகர்

**IV**

1. உட்ரோவில்சன் - அமெரிக்கா
2. செவ்ரேஸ் உடன்படிக்கை - துருக்கி
3. ஃ.பரர் - தலைவர்
4. விக்டோரியா பேரறிக்கை - மகாசாசனம்
5. பஞ்சாப் சிங்கம் - லாலா லஜபதிராய்

**V**

1. BR. அம்பேத்கர் - வரைவுகுழு
2. இந்தியாவின் இரும்பு மனிதர் - சர்தார் வல்லபாய் படேல்
3. சாணக்கியர் - இராஜாஜி
4. வைக்கம் வீரர் - ஈ.வெ.ரா
5. எல்லை காந்தி - கான் அப்துல் காபர்கான்

**VI**

1. சௌரி சௌரா - உத்திரபிரதேசம்



WWW.TAMILAGAASIRIYAR.COM

| | | | |
|---|---|---|---|
| 2. | நீதிக்கட்சி | - | டி.எம்.நாயர் |
| 3. | வள்ளலார் | - | இராமலிங்க அடிகள் |
| 4. | கெய்சர் இரண்டாம் வில்லியம் | - | ஜெர்மனி |
| 5. | கெஸ்டபோ | - | ஹிட்லரின் இரகசிய காவல்படை |

**VII**

| | | | |
|---|---|---|---|
| 1. | டிரையனான் உடன்படிக்கை | - | ஹங்கேரி |
| 2. | கருஞ்சட்டை | - | முசோலினியின் தொண்டர்கள் |
| 3. | 'U' வடிவ படகுகள் | - | ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல் |
| 4. | மங்கள் பாண்டே | - | பாரக்பூர் |
| 5. | வகுப்பு வாத அறிக்கை | - | ராம்சே மெக்டொனால்டு |

**VIII**

| | | | |
|---|---|---|---|
| 1. | நியூ இந்தியா | - | அன்னிபெசண்ட் |
| 2. | மவுண்ட் பேட்டன் பிரபு | - | சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் |
| 3. | மெயின் காம்ப் | - | எனது போராட்ம் |
| 4. | அரசை உருவாக்குபவர் | - | காமராஜர் |
| 5. | நவீன இந்தியாவின் விடிவெள்ளி | - | இராஜாராம் மோகன்ராய் |

**IX**

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரிய ஒளிமூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் | - | இராமகிருஷ்ணமடம் |
| 2 | சர்தார் வல்லபாய் பட்டேல் | - | இந்தியாவின் பிஸ்மார்க் |
| 3 | ஒன்றிணைப்பு உடன்படிக்கை | - | 1967 |
| 4 | அழித்துப் பின்வாங்கும் கொள்கை | - | ரஷ்யா |
| 5 | ரோம் அணிவகுப்பு | - | 1922 |

**X**

| | | | |
|---|---|---|---|
| 1. | அல்பேனியா | - | 1939 |
| 2. | தேவதாசிமுறை | - | டாக்டர் முத்துலட்சமி ரெட்டி |
| 3. | ஈஸ்வர சங்கர வித்யாசாகர் | - | சமய, சமூக சீர்திருத்தவாதி |
| 4. | அட்லாண்டிக் சாசனம் | - | எப்.டி.ரூஸ்வெல்ட் |
| 5. | புனரமைப்பு நிதி நிறுவனம் | - | கடனுதவிகள் |

**XI**

| | | | |
|---|---|---|---|
| 1. | கூட்டாச்சி ரிசர்வ் வங்கி | - | வங்கிகள் மற்றும் தொழிற்சாலைகள் |

| | | |
|---|---|---|
| 2. ஹாங்காங் தீவு | - | இங்கிலாந்து |
| 3. நானா சாகிப் | - | கான்பூர் |
| 4. மோதிலால் நேரு | - | சுயராஜ்ஜியக் கட்சி |
| 5. சுப்பிரமணிய பாரதி | - | நாட்டுப்பற்றுமிக்க எழுத்தாளர் |

**XII**

| | | |
|---|---|---|
| 1. பாதுகாப்பு பரிவர்த்தனை சட்டம் | - | பங்குச் சந்தை உரிமம் |
| 2. ஐரோப்பிய ஒன்றிய வரவு செலவு | - | ஐரோப்பிய கணக்கீட்டாளர்கள் மன்றம் |
| 3. காக்கிச் சட்டைகள் | - | ஹிட்லரின் தொண்டர்கள் |
| 4. சுதேசி | - | ஒருவருடைய சொந்த நாடு |
| 5. பாண்டிச்சேரி | - | பிரெஞ்சுப் பகுதிகள் |

**XIII**

| | | |
|---|---|---|
| 1. சத்தியமூர்த்தி | - | பூண்டி நீர் தேக்கநிலை |
| 2. கோவா | - | போர்ச்சுக்கீசிய பகுதிகள் |
| 3. இராயல் விமானப்படை | - | இங்கிலாந்து |
| 4. பன்னாட்டு குடியேற்றம் | - | சீனா |
| 5. இராணி இலட்சுமிபாய் | - | ஜான்சி |

**XIV**

| | | |
|---|---|---|
| 1. லக்னோ | - | காலின் கேம்பேல் |
| 2. பதேக்ஹைதர் | - | வேலூர்கலகம் |
| 3. தொடர் அணு சோதனை | - | 1996 |
| 4. தற்போதைய ஐ.நா.பொதுச் செயலாளர் | - | பான்கீமூன் |
| 5. ஜி.ன்.மோன்ட் | - | பிரான்சு அரசியல் பிரமுகர் |

**XV**

| | | |
|---|---|---|
| 1. ரத்து செய்யும் உரிமை | - | எதிர்வாக்கு |
| 2. இனவெறிக் கொள்கை | - | ஆப்பிரிக்கா |
| 3. இரண்டாம் பகதூர்ஷா | - | டெல்லி |
| 4. வீரத்தமிழன்னை | - | டாக்டர்.எஸ்.தருமாம்பாள் |
| 5. கர்நாடகப் போர்கள் | - | இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்க முடிவு |



WWW.TAMILAGAASIRIYAR.COM

## குறுகிய விடையளி

**1. ஏகாதிபத்தியம் வரையறு**

ஏகாதிபத்தியம் என்பது ஒரு நாடு பிற நாடுகளின் பகுதிகளை வென்று அவற்றை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல் ஏகாதிபத்தியம் எனப்படும்.

**2. காலணி ஆதிக்கம் என்பது என்ன?**

அந்நிய நாட்டில் குடியேற்றங்களை ஏற்படுத்தி அதன் இயற்கை வளங்களை சுரண்டுதல் காலணி ஆதிக்கம் எனப்படும்.

**3. தைபிங் கலகம் பற்றி எழுதுக.**

1. நான்சிங் உடன்படிக்கையைப் பின்பற்றி அந்நிய நாட்டவர்கள் சீனாவுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டனர்

2. எனவே 1854 ல் மஞ்சு அரசுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் எதிராக சீனர்கள் கலகத்தில் ஈடுபட்டனர் இதுவே தைப்பிங் கலகம் என்று அழைக்கப்பட்டது.

**4. முதல் உலகப் போருக்கான உடனடி காரணம் யாது?**

1. 1914 ஜீன் 28ம் நாள் பாஸ்னிய தலைநகர் செராஜிவோ நகரில் செர்விய தீவிரவாத இளைஞன் ஒருவனால் ஆஸ்திரிய நாட்டு பட்டத்து இளவரசர் பிரான்சிஸ் பெர்டினாண்டும் அவரது மனைவி இசபெல்லாவும் சுட்டுக் கொல்லப்பட்டனர் இது குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என ஆஸ்திரியா செர்பியாவைக் கோரியது

2. ஆனால் செர்பியாவின் பதில் ஆஸ்திரியாவிற்கு திருப்தி அளிக்கததால் அஸ்திரிய 1914ம் ஆண்டு ஜீலை 28ம் தேதி செர்பியா மீது போரை அறிவித்தது.

**5. செர்செயில்ஸ் உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் யாவை?**

1. ஆஸ்திரிய மற்றும் ஹங்கேரி குடியரசுகள் அங்கீகரிக்கப்பட்டன.
2. டான்சிக நகருக்கு சர்வதேச அங்கீகாரம் அளிக்கப்பட்டது.



WWW.TAMILAGAASIRIYAR.COM

**6. சர்வதேச சங்கத்தின் அங்கங்கள் யாவை?**

1. பொதுச்சபை
2. மன்றம்
3. செயலகம்
4. சர்வதேச நீதிமன்றம்
5. சர்வதேச தொழிலாளர் அமைப்பு

**7. பொருளாதார பெருமந்தம் தோன்றக் காரணங்கள் யாவை?**

1. அமெரிக்க பங்கு சந்தையில் ஏற்பட்ட சரிவு
2. பங்குகளின் விலை உயரும் என்ற அனுமானத்தில் மக்கள் கடன் வாங்கி பங்கு சந்தையில் முதலீடு செய்தனர்

**8. பாசிசம் பொருள் கூறு**

1. பாசிசம் பாசிஸ் என்ற லத்தின் வார்த்தையிலிருந்து வந்தது
2. இதற்கு கூட்டு அல்லது குழு என்று பொருள்.

**9. மியூனிச் உடன்படிக்கை பற்றி கூறு**

1. ஹிட்லர் மியூனிச் என்னும் இடத்தில் இங்கிலாந்து பிரதமர் நிவில் சேம்பர்லைன் என்பவருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்.

2. இதன்படி ஹிட்லர் சூடட்டன்லாந்தை தவிர பிற இடங்களை கைப்பற்றக் கூடாது என்ற உறுதி மொழியைப் பெற்றுக் கொண்டார்.

3. ஆனால் 1939 ல் மியூனிச் உடன்படிக்கையை மீறி ஹிட்லர் செக்கோஸ்லோவாகியா முழுவதையும் ஜெர்மனியுடன் இணைத்துக் கொண்டார்

**10. அழித்துப் பின்வாங்கும் கொள்கை பற்றி எழுதுக.**

இராஷ்யர்கள் இரண்டாம் உலகப்போரில் இக்கொள்கையைப் பின்பற்றினர் இதன்படி பயிர்கள், பாலங்கள், இருப்புப் பாதைகள் போன்றவற்றை எதிரிகள் கைப்பற்றாமல் இருக்க அவற்றை தாங்களே தீயிட்டு அழித்துக் கொண்டு முன்னேறினர்

**11. ஐ.நாவின் சிறப்பு நிறுவனங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக**

1. உலக சுகாதார நிறுவனம்

2. பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம்
3. உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம்
4. உலக வங்கி

**12. ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய நோக்கங்கள் யாவை?**

1. ஐரோப்பிய குடியுரிமை ஏற்படுத்துதல்
2. சமுதாய முன்னேற்றத்தை உயர்த்துதல்
3. ஐரோப்பிய பாதுகாப்பை பலப்படுத்துதல்
4. சமநீதியை உறுதி செய்தல்

**13. விக்டோரியா மகாராணியின் பேரறிக்கையின் முக்கியத்துவம் யாது?**

1. இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை இங்கிலாந்து அரசி நேரடியாக மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டது.
2. இந்தியாவின் பழமையான பண்பாடும் பழக்க வழக்கங்களும் மதிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.
3. புரட்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

**14. 1857ம் ஆண்டு நடந்த புரட்சியின் உடனடிக் காரணம் யாது?**

1. என்.ஃ.பில்டு ரக துப்பாக்கியும், கொழுப்பு தடவிய தோட்டக்களும் புரட்சியின் உடனடி காரணம் ஆகும்.
2. இதன் மேலுறையில் பசு, மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்டுள்ளது என்ற வதந்தியினால் இதை வீரர்கள் உபயோகிக்க மறுத்தனர்.
3. மங்கள் பாண்டே கொழுப்புத் தடவிய தோட்டாவை உபயோகிக்க மறுத்து தனது மேலதிகாரியை சுட்டுக் கொன்றார்.
4. இதனால் அவர் தூக்கிலடப்பட்டார். இந்நிகழ்ச்சியே புரட்சிக்கு உடனடிக் காரணமாயிற்று.

**15. பெரும் புரட்சியின் ஈடுபட்ட முக்கிய தலைவர்கள் மற்றும் முக்கிய இடங்கள் யாது?**

| | |
|---|---|
| இரண்டாம் பகதூர்ஷா | - டெல்லி |
| ஜான்சிராணி | - மத்தியடெல்லி |
| பேகம் ஹஸ்ரத் மஹால் | - லக்னோ |
| நான சாகிப், தாந்தியதோப் | - கான்பூர் |

**16. ஆரிய சமாஜத்தின் பணிகள் யாவை?**



WWW.TAMILAGAASIRIYAR.COM

1. மக்களிடையே சுயமரியாதையும், தன்னம்பிக்கையையும் வளர்ந்தது
2. மதம் மாறிய இந்துக்களை மீண்டும் இந்து சமயத்தில் சேர்த்தது.

**17. பிரம்ம ஞான சபையின் கொள்கைகள் யாவை?**

1. மக்களிடையே சகோதரத்துவ உணர்வை வளர்ப்பது
2. மக்களிடையே தெய்வீக சக்திகளை வளர்ப்பது

**18. 19-ம் நூற்றாண்டின் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களின் விளைவுகள் யாது?**

1. இவ்வியக்கங்கள் உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம், தீண்டாமை ஆகியவற்றை ஒழித்தது.
2. பெண்கல்வி, கலப்பு திருமணம், விதவைகள் மறுமணம், ஆகியவற்றை ஏற்றுக் கொண்டது.
3. சமுதாய எழுச்சி, தேசிய உணர்வு பெருகிட வழி வகுத்தது.

**19. இந்திய தேசிய காங்கிரஸின் குறிக்கோள்கள் யாவை?**

1. சட்டமன்றங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.
2. கல்வியைப் பரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. இராணுவச் செலவுகளை குறைக்க வேண்டும்.
4. இந்தியர்களை உயர்பதவிகளில் நியமிக்க வேண்டும்.

**20. வேலூர் கலகம் பற்றி கூறு.**

1. இந்து வீர்கள் நெற்றியில் சமயக் குறிகளை இடக்கூடாது என்றும், முஸ்லீம் வீர்கள் தாடி மீசைகளை வெட்டி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். என்ற கட்டுப்பாடுகள் வேலூர் கலகத்திற்கு வழி வகுத்தது.
2. 1806 ஜீலை 9ல் திப்புவின் மகள் திருமணத்தின் போது வீரர்கள் ஆங்கிலேயர்களைத் தாக்கி வேலூர் கோட்டையைக் கைப்பற்றினர்.

**21. நீதிக்கட்சியின் ஆட்சி பற்றி எழுதுக.**

1. 1920 திரு.சுப்பராயலு தலைமையில் ஆட்சி அமைத்தது
2. 1923 ல் திரு.டி.எம்.சிவஞானம் பிள்ளை தலைமையில் ஆட்சி அமைத்தது
3. 1926- மற்றும் 1930 ல் மீண்டும் ஆட்சி பொறுப்பை ஏற்றது.

**22. பெரியார் வைக்கம் வீரர் என ஏன் அழைக்கப்பட்டார்?**



WWW.TAMILAGAASIRIYAR.COM

1. வைக்கத்தில் நடைபெற்ற போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலய நுழைவுத்தடை சட்டத்தை எதிர்த்து போராடினார்
2. இறுதியில் திருவிதாங்கூர் அரசு ஆலய நுழைவு தடைச்சட்டத்தை தளர்த்தி அனைவரும் ஆலயத்திற்க்குள் நுழையலாம் என அறிவித்தது. எனவே இவர் வைக்கம் வீரர் எனப்பட்டார்.

**23. தேவதாசி முறை ஒழிப்பிற்கு முத்துலட்சுமி ரெட்டியின் போராட்டத்தை விளக்குக.**

1. தேவதாசி முறையை ஒழிக்க தன் வாழ் நாள் முழுவதையும் அர்பணித்தார்.

2. தந்தை பெரியார், திரு.வி.க. இருவரும் இவரது கருத்தை ஆதரித்தனர்

3.எனவே, நீதிக்கட்சி அரசாங்கம் தேவதாசி ஒழிப்பு சட்டத்தை நிறைவேற்றியது.

**24. காமராஜரின் நலத்திட்டப் பணிகள் பற்றி எழுதுக.**

1. மதிய உணவுத் திட்டம்

2. புதிய பள்ளிகளைத் திறந்து இலவச கல்வி வழங்குதல்

3. வேளாண்மையை மேம்படுத்துதல்

4. கால்வாய்களைக் கட்டுதல்

5. அணைகளைக் கட்டுதல்

6. தொழிற்சாலைகளை அமைத்தல் போன்ற நலத்திட்டங்களை மேற்கொண்டார்

## தலைப்பு வினாக்கள்

**1. பிளாசி மற்றும் பக்சார் போர்**

அ. 1757-ம் ஆண்டு வங்காளத்தின் நவாப்பாக இருந்தவர் யார் ?
சிராஜ் உத் தௌலா.

ஆ. துணைப் படைத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் யார் ?
வெல்லெஸ்லி பிரபு

இ. டல்ஹௌசி பிரபுவின் கொள்கை யாது ?
வாரிசு இழப்புக் கொள்கை

ஈ. விக்டோரியா மகாராணியின் பிரகடனம் எப்பொழுது வெளியிடப்பட்டது?
நவம்பர் 1, 1858

**2. ஜெர்மனியின் போராசை**

அ) முதல் உலகப்போரின் போது ஜெர்மனியின் அரசர் யார் ?
கெய்சர் இரண்டாம் வில்லியம்

ஆ).அவரின் நம்பிக்கை என்ன ?
உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் உரிமை மற்றும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது என அவர் நம்பினார்.

இ) அவரால் சகித்துக் கொள்ள முடியாதது எது?
ஆங்கிலேயர்களின் பேரரசில் சூரியன் மறைவதே இல்லை என்ற கூற்றை அவரால் சகித்துக் கொள்ளள முடியவில்லை.

ஈ) எங்கு கப்பற்படை தளம் அமைத்திருந்தார்?
ஹெலிகோலாண்ட்

**3. உடனடிக்காரணம்**

அ) பாஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவை எப்பொழுது ஆஸ்திரியா இணைந்தது?
கி.பி.1908.

ஆ) ஆஸ்திரியா நாட்டு பட்டத்து இளவரசர் யார்?
பிரான்ஸிஸ் பெர்டினாண்ட்

இ) அவருக்கு நேர்ந்தது என்ன?
செர்பிய தீவிரவாத இளைஞன் ஒருவனால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

ஈ) ஆஸ்திரேலியா என்ன செய்வது?
ஆஸ்திரியா செர்பியாவிடம் விளக்கம் கேட்டது.

**4. போரின் போக்கு**

அ) முதல் உலகப் போரின் காலம் என்ன?
கி.பி.1914 – கி.பி 1918



WWW.TAMILAGAASIRIYAR.COM

ஆ) மைய நாடுகள் யாவை?

ஜெர்மனியும் அதன் கூட்டணி நாடுகளும், மைய நாடுகள்

இ) நேச நாடுகள் யாவை?

இங்கிலாந்தும் அதன் நட்பும் நாடுகளும் நேச நாடுகள்

ஈ) போரில் உபயோகபடுத்தப்பட்ட போர் கருவிகள் யாவை?

பிரங்கிப்படை மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள்

**5. சர்வதேச சங்கம்**

அ) சர்வதேச சங்கத்திற்கு முன் தோன்றிய சில சர்வதேச அமைப்புகளின் பெயர்களை எழுதுக

1. சர்வதேச சமுதாயம்
2. உலக அமைதி கூட்டமைப்பு
3. சுதந்திர நாடுகளின் சர்வதேச சங்கம்

ஆ) சர்வேத சங்கத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது ?

ஜெனிவா

இ) உறுப்பு நாடுகள் தங்கள் பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காண வேண்டும் ?

சர்வதேச சங்கத்தின் மூலம் சுமூகமான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும்

ஈ) ஜப்பான் எப்போது மஞ்சூரியாவைக் கைப்பற்றியது ?

1931

**6. மத்திய இந்தியாவில் பெரும் புரட்சி?**

அ) மத்திய இந்தியாவில் புரட்சியை வழிநடத்திச் சென்றவர் யார்?

ஜான்சிராணி இலட்சமிபாய்

ஆ) ஜான்சிராணி இலட்சுமிபாய் கைப்பற்றிய நகரம் எது?

குவாலியர்

இ) இராணி இலட்சுமிபாயின் முடிவு என்ன?

1858 ஆண்டு கடந்த போரில் கொல்லப்பட்டார்

ஈ) தாந்தியா தோப்பிற்கு நிகழ்ந்தது என்ன?

கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

**7. பிரம்ம சமாஜம்**



WWW.TAMILAGAASIRIYAR.COM

அ) பிரம்ம சமாஜத்தினை நிறுவியவர் யார்?

இராஜராம் மோகனராய்

ஆ) இராஜராம் மோகனராய் பயின்ற மொழிகள் யாவை?

அரபிக், சமஸ்கிருதம், பாரசீகம், ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தின், கிரேக்கம், மற்றும் ஹீப்ரு

இ) இராஜராம் மோகனராய் எழுதிய புத்தகங்கள் யாவை?

ஏசு கிறிஸ்துவின் கட்டளைகள், அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி

ஈ) பிரம்ம சமாஜத்தின் நம்பிக்கை யாது?

ஒரே கடவுள், பொது சமயத்தில் நம்பிக்கை

**8. ஆரிய சமாஜம்**

அ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் இயற்பெயர் என்ன?

மூல்சங்கர்

ஆ) சுவாமி சரஸ்வதியின் குரு யார்?

சுவாமி விராஜனந்தா

இ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் கொள்கை என்ன ?

வேதங்களை நோக்கிச் செல்

ஈ) ஆரிய சமாஜம் எதனை ஆதரித்தது ?

பெண்கல்வி, கலப்பு மணம், சம்பந்தி உணவு முறை, பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம். ஆகியவற்றை ஆதரித்தது.

**9. பிரம்ம ஞான சபை**

அ. பிரம்மஞான சபையை நிறுவியவர் யார்?

மேடம் பிளாவட்ஸ்கி மற்றும் ஹென்றி எஸ் ஆல்காட்.

ஆ. பிரம்மஞானசபை நிறுவப்பட்டது ஏன் ?

கடவுள் பக்தி மற்றும் உண்மை அறிவைப் இச்சபை நிறுவப்பட்டது பெற

இ. 1893-ம் ஆண்டு பிரம்மஞான சபையின் தலைவர் யார் ?

திருமதி. அன்னிபெசன்ட்

ஈ) பிரம்மஞானசபையின் தலைமையகம் எங்குள்ளது ?

சென்னையில் உள்ள அடையார்



WWW.TAMILAGAASIRIYAR.COM

**10. இராமகிருஷ்ண மடம்**

அ) இராமகிருஷ்ண பரமஹம்சர் என்பர் யார் ?

கோவில் அர்ச்சகர்

ஆ) .இராமகிருஷ்ண மடத்தை நிறுவியது யார் ?

சுாவமி விவேகானந்தா

இ) உலக சமயமாநாடு எங்கு, எப்பொழுது நடைபெற்றது ?

1893-ம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோ நகரில்

ஈ) உலக சமய மாநாட்டில் இந்து சமயத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்டவர் யார் ?

சுவாமி விவேகானந்தர்

**11. டாக்டர் பி.ஆர். அம்பேத்கார்**

அ). தலித்துக்கள் மற்றும் தாழ்த்துப்பட்டோர்களின் மீட்பாளர் யார் ?

டாக்டர் பி.ஆர். அம்பேத்கார்

ஆ) இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் யார் ?

டாக்டர் பி.ஆர். அம்பேத்கார்

இ) இந்திய அரசாங்கத்தால் இவர் எவ்வாறு சிறப்பிக்கப் பட்டார் 1990-ல் மிகப் பெரிய விருதான பாரத ரத்னா விருது மூலம் சிறப்பிக்கப்பட்டது.

ஈ) மும்பையில் மகத் மார்ச் என்ற பேரணியை தலைமை ஏற்று நடத்தியது ஏன் ?

தீண்டத்தகாத மக்களுக்காக பொது குளத்தில் குடிநீர் எடுக்கும் உரிமையை பெற மும்பையில் மகத் மார்ச் என்ற பேரணியை நடத்தினார்

## 5 மதிப்பெண் வினாக்கள்

**1. ஏகாதிபத்தியம் ஏற்படக் காரணங்கள் யாவை?**

1. **தொழிற்புரட்சி:**

தொழிற்புரட்சி காரணமாக உற்பத்தி அதிகரிப்பு.



WWW.TAMILAGAASIRIYAR.COM

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை சந்தை மற்றும் மூலப்பொருளுக்காகப் பயன்படுத்துவது.

2. **தேசியப் பாதுகாப்பு:**

நாட்டின் செல்வத்தை அயல்நாட்டில் முதலீடு செய்வது.

பாதுகாப்பிற்க்காக அந்த நாடுகளை கட்டுப்பாட்டில் கொண்டு வருவது.

3. **தேசிய மயமாக்கல்:**

வளர்ச்சி குன்றிய நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்துவது கருப்பின மக்களுக்கு நாகரிகம் கற்று தருவது தங்களின் பெருமை எனக் கருதுவது.

4. **சமநிலை ஆதிக்கம்:**

சமநிலை ஆதிக்கம் பெற அண்டை நாடுகளுக்கு இணையாக குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த முயல்வது.

5. **புதிய வழித்தடங்கள் கண்டுபிடிப்பு:**

குடியேற்ற நாடுகளின் செல்வத்தை சுரண்ட உதவியது.

**2. முசோலினியின் தலைமையில் பாசிசம் படைத்த சாதனைகள் யாவை?**

1. சிறந்த தலைவர்.
2. இத்தாலியை வலிமை பொருந்திய நாடாக மாற்ற முயன்றார்
3. அமைதி மற்றும் ஒழுங்கை
4. நிலை நாட்டினார்.
5. தொழில் பட்டயம் தொழிலாளர்களின் நலனுக்காக வெளியிடப்பட்டது.
6. பொருள் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை திறமையான நிர்வாகி
7. 1929ல் போப்புடன் லேட்டரன் உடன்படிக்கை. போப் அரசரின் மேலாண்மையை
8. அங்கீகரித்தார்.

**3. இரண்டாம் உலகப்போரின் விளைவுகள் யாவை?**

2. 50 மில்லியன் மக்கள் இறப்பு
3. இத்தாலி ஜெர்மனியில் சர்வாதிகார ஆட்சி முடிவு



WWW.TAMILAGAASIRIYAR.COM

4. போரில் அமெரிக்கா ஜப்பானைக் கைப்பற்றியது
5. அமெரிக்கா, ரஷ்யா உலகில் முதல் தர நாடுகளாக உருவாதல்
6. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் சுதந்திரப் போராட்டம் தொடக்கம்
7. ஏகாதிபத்திய கொள்கை கைவிடப்பட்டது.
8. அமைதி மற்றும் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்தப்பட்டது.

**4. பிரம்ம சமாஜத்தை பற்றி விரிவாக எழுதுக.**

இராஜாராம் மோகன்ராய் பிரம்ம சமாஜத்தை தோற்றிவித்தார்.

பல மொழிகளை அறிந்தவர்.

பல நூல்களை எழுதியவர் முகாலாய மன்னரால் இராஜா என்ற பட்டத்தை பெற்றவர். இவர் சமுதாயத்தில் காணப்பட்ட பல்வேறு மூடப்பழக்க வழக்கங்களை நீக்க பாடுபட்டார். கடவுள் ஒருவரே என்ற கொள்கை, ஆடம்பர சடங்கு, உருவ வழிபாடு, தீண்டாமை மற்றும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழித்தார்.

**5. 1920-1922 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தின் படிநிலை விளக்குக.**

**முதல்நிலை:**

ஆங்கில அரசிடம் இருந்து பெற்ற பதவி, பட்டம், விருது துறப்பு.

**இரண்டாம் நிலை:**

அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், சட்டமன்ற நடவடிக்கை புறக்கணிப்பு.

**மூன்றாம் நிலை:**

வரி செலுத்த மறுப்பது.

**6. நீதிக்கட்சியில் தோற்றம் மற்றும் சாதனைகள் எழுதுக.**

**தோற்றம்:** 1916 ஆம் ஆண்டு டி.எம். நாயர் மற்றும் தியாகராய செட்டியால் தோற்றுவிப்பு.

1920 தேர்தலில் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைப்பு.

திரு. சுப்பராயலு, திரு.டி.எம். சிவஞானம்பிள்ளை தலைமையில் ஆட்சி பிறகு ப. முனிசாமி நாயுடு தலைமையில் ஆட்சி



WWW.TAMILAGAASIRIYAR.COM

**சாதனை:** சாதி அடிப்படையில் கல்வி, வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு கிராமங்கள் முன்னேற்றம் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்தியது.

உயர்க்கல்வி நிறுவனங்களை நெறிப்படுத்துவது.

ஆந்திரா, அண்ணாமலை பல்கலைக்கழகம் தொடங்குதல் பெண்களுக்கு வாக்குரிமை, தேவதாசி முறைஒழிப்பு வன்கொடுமை தடைச்சட்டம், இயற்றுதல் இலவச வீட்டுமனைத் திட்டம், இலவச மதிய உணவுத் திட்டம்.

1944ல் சேலத்தில் நடந்த மாநாட்டில் பெரியார் “நீதிக்கட்சியை திராவிடர் கழகம் என பெயர் மாற்றினார்



WWW.TAMILAGAASIRIYAR.COM

# காலக்கோடு

**1900 – 1920**

1905 – வங்காளப் பிரிவினை

1906 – முஸ்லீம் லீக் தோற்றம்

1914 – முதல் உலகப்போரின் துவக்கம்

1918 – முதல் உலகப்போரின் முடிவு

1919 – ஜாலியன் வாலாபாக் படுகொலை

1920 – ஒத்துழையாமை இயக்கம்

**1920 – 1930**

1920 – கிலாபத் இயக்கம்

1922 – சௌரி சௌரா இயக்கம்

1930 – தண்டி யாத்திரை

1927 – சைமன் குழு வருகை

1923 – சுயராஜ்ஜியக் கட்சியின் தோற்றம்

**1930 – 1940**

1930 - முதல் வட்டமேசை மாநாடு

1931 - இரண்டாம் வட்டமேசை மாநாடு

1932 - மூன்றாம் வட்டமேசை மாநாடு

1935 - இந்திய அரசு சட்டம்

1939 - இரண்டாம் உலகப்போரின் தொடக்கம்

1940 - ஆகஸ்டு நன்கொடை

**1940 – 1950**

1942 – வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1945 - இரண்டாம் உலகப்போர் முடிவு

1946 - இடைக்கால அரசு அமைப்பு

1947 - இந்தியா சுதந்திரம் அடைதல்

1950 - இந்தியா குடியரசு ஆகுதல்



WWW.TAMILAGAASIRIYAR.COM

# புவியியல்

## சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக (ஒரு மதிப்பெண்)

1. பாக் நீர் சந்தி **ஸ்ரீலங்காவை** இந்தியாவிலிருந்து பிரிக்கிறது.
2. இந்தியாவின் நடுவே செல்லும் மிக முக்கிய தீர்க்க கோடு **அலகாபாத்** நடுவே செல்கிறது
3. இந்தியாவின் மிக உயரமான சிகரம் **காட்வின் ஆஸ்டின்**
4. **இமயமலைகள்** பனி உறைவிடம் என அழைக்கப்படுகின்றன
5. இந்தியாவிற்கு தென்கிழக்கு திசையில் **வங்காள விரிகுடா** அமைந்துள்ளது
6. இந்தியாவில் நிலவுவது **வெப்ப மண்டல பருவக்காற்று காலநிலை**
7. கடற்கரை பகுதிகளில் நிலவுவது **சமமான காலநிலை**
8. மேற்கத்திய இடையூறுகளால் மழைபெறும் பகுதி **பஞ்சாப்**
9. கோடைப்பருவத்தில் இந்தியாவின் வடகிழக்குப்பகுதியில் வீசும் உள்ளூர் புயலின் பெயர் **நார்வெஸ்டர்ஸ்**
10. வறண்ட நிலப்பகுதியில் காணப்படும் மண் **பாலைமண்**
11. பருவக்காற்று காடுகள் **இலையுதிர் காடுகள்** என்றும் அழைக்கப்படுகின்றன
12. மோனோசைட் மணலில் காணப்படும் தாது **யுரேனியம்**
13. பருத்தி ஒரு **பணப்பயிர்**
14. வறட்சியிலும் வளரும் பயிர் **திணைவகை**
15. நெல் அதிகமாக விளையும் மண் **வண்டல் மண்**
16. தேயிலை மற்றும் காபி பயிர் அதிகமாக விளையும் இடம் **மலைச் சரிவுகள்**
17. பருத்தியாலை ஒரு **வேளாண் சார்ந்த தொழில்**
18. இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்படுவது மும்பை
19. டாடா இரும்பு எ∴கு நிறுவனம் அமைந்துள்ள இடம் ஜாம்ஜெட்பூர்
20. சோடா நாகபுரி பீடபூமி **கனிம** வளத்திற்கு புகழ்பெற்றது
21. மின்னியல் தலைநகரம் என அழைக்கப்படுவது **பெங்களூர்**
22. ஓடைகளிலும், ஏரிகளிலும் இயற்கை சத்து அதிகரிப்பது **மிகையூட்ட வளமுறுதல்**
23. நீர் மாசடைவதை **நீர் மாசடைதல்** என்றழைக்கிறோம்
24. இயற்கை காற்று மாசடைவதற்கு முக்கிய காரணம் **வாகன புகை**
25. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைப்பெறும் வணிகம் **உள்நாட்டு வணிகம்**
26. நம் நாட்டில் குறைந்த செலவு மற்றும் அனைவராலும் பயன்படுத்தப்படும் போக்குவரத்து **சாலைவழி**
27. இந்திய இரயில் போக்குவரத்தின் தலைமையகம் உள்ள இடம் **டெல்லி**
28. வேகம் மற்றும் விலையுர்ந்த நவீன போக்குவரத்து **வான்வழி**
29. மின்காந்தம் பிரதிபலிப்பதை கண்டறியும் கருவி **உணரி**
30. வான்வழி புகைப்படங்களைப் பயன்படுத்தி வரையப்படும் வரைபடங்கள் **செங்குத்து**



WWW.TAMILAGAASIRIYAR.COM

## பொருத்துக

| | | | | |
|---|---|---|---|---|
| I | 1. பருவ மழை வெடிப்பு | - | ஜுன் முதல் செப்டம்பர் |
| | 2. கரிசல் மண் | - | பருத்திப்பயிர் |
| | 3. கோதுமை | - | பஞ்சாப் |
| | 4. சணல் தொழிலகம் | - | மேற்கு வங்கம் |
| | 5. கிராமச் சாலைகள் | - | பஞ்சாயத்து |
| II | 1. நில அளவை | - | உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி |
| | 2. நார்வெஸ்டர்ஸ் | - | வடகிழக்கு இந்தியாவின் தலக்காற்று |
| | 3. பழுப்பு நிலக்கரி | - | ஒரு வகை நிலக்கரி |
| | 4. இரும்பு | - | உத்திரப்பிரதேசம் |
| | 5. வாகனத் தொழிலகம் | - | தமிழ்நாடு |
| III | 1. மாவட்டச் சாலைகள் | - | மாநகராட்சி |
| | 2. தொலை நுண்ணுர்வு | - | முறையான வான்வெளி நிலப்படம் |
| | 3. நீர் சேமிப்பு நடவடிக்கை | - | மக்களின் பங்கேற்பு |
| | 4. மாங்ரோல் காடுகள் | - | சுந்தரவனம் |
| | 5. ஆப்பிள் | - | ஹிமாச்சலபிரதேசம் |
| IV | 1. மென்பொருள் தொழிலகம் | - | பெங்களூர் |
| | 2. வடகிழக்கு பருவக்காற்றுக் காலம் | - | அக்டோபர் முதல் நவம்பர் |
| | 3. புதுப்பிக்க கூடிய வளங்கள் | - | சூரியன் |
| | 4. ரப்பர் | - | கேரளா |
| | 5. மத்திய இரயில்வே | - | மும்பை |
| V | 1. காற்றில் மிதக்கும் பலூன் | - | பிரஞ்சு மேப்பியலாளர்கள் |
| | 2. தெற்கு இரயில்வே | - | சென்னை |
| | 3. இரும்பு எ∴குத் தொழிலகம் | - | சோட்டா நாக்பூரி |
| | 4. சணல் | - | மேற்கு வங்கம் |
| | 5. புதுப்பிக்க இயலாத வளங்கள் | - | பெட்ரோலியம் |
| VI | 1. அதிகமழை பெறும் பகுதிகள் | - | மௌசின்ராம்,சிரப்பூன்ஜி |
| | 2. சர்க்கரைத் தொழிலகம் | - | உத்திரப்பிரதேசம் |
| | 3. வடக்கு இரயில்வே | - | டில்லி |
| | 4. டி.ஐ.ஆர்.ஓ.எஸ். | - | அமெரிக்கா |
| | 5. விமானம் | - | ஏராளமான வழிகள் |



WWW.TAMILAGAASIRIYAR.COM

## குறுகிய விடையளி

**1. இந்தியாவின் முக்கிய இயற்கை அமைப்புப் பிரிவுகள் யாவை?**

1. வடக்கு மலைகள்
2. வடஇந்திய பெரும் சமவெளிகள்
3. தீபகற்ப பீடபூமி
4. கடற்கரை சமவெளிகள்
5. திவுகள்

**2. இந்தியாவின் வடக்கு மலைகளிலுள்ள இரண்டு முக்கிய புனித தலங்களைக் குறிப்பிடுக.**

அமர்நாத், தேதார்நாத், பத்ரிநாத் மற்றும் வைஷ்ணவிதேவி கோவில்கள்.

**3. இமய மலையின் முக்கியத்துவத்தில் ஏதேனும் இரண்டினைக்கூறு**

1. வட துருவத்திலிருந்து வீசும் கடும் குளிர் காற்றை இமயமலை தடுத்து நிறுத்துகிறது.

2.தென்மேற்குப் பருவக் காற்றின் வங்காள விரிகுடா கிளையை இமயமலைத் தடுத்து கங்கைச் சமவெளிக்கு கனமழையை கொடுக்கிறது.

**4. இந்தியக் காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகளின் பெயர்களை எழுதுக**

1. அட்சங்கள்
2. உயரம்
3. கடலிருந்து தூரம்
4. காற்று
5. மலைகளின் அமைவு

**5. மிக அதிக மழைபெறும் பகுதிகளின் பெயர்களைக் குறிப்பிடு**

கிழக்கு இமயமலையின் தெற்கு சரிவு, அஸ்ஸாம், வங்காளம், கொங்கணம் மற்றும் மலபார் கடற்கரையை உள்ளடக்கிய மேற்க்கு கடற்கரைப் பகுதிகள்

**6. இயற்கை வளம் என்றால் என்ன?**

அன்றாட வாழ்வின் தேவைகளை நிறைவு செய்ய இயற்கையிலிருந்து பெறப்படும் அனைத்துப் பொருட்களும் இயற்கை வளம் ஆகும்

**7. இந்தியாவில் மைக்கா உற்பத்தியாகும் இடங்கள் யாவை?**

ஆந்திரபிரதேசம், ஜார்க்கண்ட், பீகார் மற்றும் ராஜஸ்தான்

**8. செழமையான மண்ணில் காணப்படும் பொருள்கள் யாவை?**

1. **பெரும் சத்துப் பெருட்கள்,** நைட்ரஜன், பொட்டாசியம், பாஸ்பேட்,

2. **நுண் சத்துப் பொருட்கள்,** கந்தகம், குளோரின், செம்பு, மாங்கனிஸ், மாலிப்தீனம், போரான், இரும்பு, கோபால்டு, துத்தநாகம், ஆகியவை ஆகும்.



WWW.TAMILAGAASIRIYAR.COM

**9. வேளாண் தொழிலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?**

1. நிலத்தோற்றம்
2. காலநிலை
3. மண்வகை
4. நீர்

**10. வேளாண் தொழிலின் வகைகள் யாவை**

1. பழமையான வேளாண்மை
2. தன்னிறைவு வேளாண்மை
3. வணிக வேளாண்மை
4. தோட்ட வேளாண்மை

**11. தோட்டப் பயிர்கள் யாவை?**

தேயிலை, காப்பி, மற்றும் இரப்பர்

**12. உற்பத்தி என்றால் என்ன?**

இயற்கை வளங்களை இயந்திரங்கள் முலமாக பயன்படுத்தக்கூடிய பொருளாக மாற்றுவதே உற்பத்தி ஆகும்.

**13. தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?**

1. மூலப்பொருட்கள்
2. எரிசக்தி
3. போக்குவரத்து
4. மனிதசக்தி
5. நீர்வளம்
6. சந்தை
7. அரசாங்க கொள்கைகள்

**14. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் யாவை?**

1. பருத்தி ஆலைகள்
2. சணல் ஆலைகள்
3. சர்க்கரை ஆலைகள்

**15. நீர் மாசடைதல் என்றால் என்ன?**

நீர் மாசடைதல் என்பது வேதியியல், இயற்பியல், அல்லது உயிரியல், மாற்றம் நன்னீரின் தரத்தில் ஏற்படுவதாகும். இதைப் பயன்படுத்தும் போது தீங்கினை விளைவிக்கும்.

**16. ஒலி மாசடைதல் என்றால் என்ன?**



WWW.TAMILAGAASIRIYAR.COM

1. மனிதர்கள் அல்லது இயங்திரங்களினால் ஏற்படும் ஒலி செயல்பாடுகளுக்கு இடையூறாக உள்ளது.

2. இது மனித, விலங்குகளின் சமநிலையைப் பாதிக்கிறது.

**17. உயிரினப் பன்மை என்றால் என்ன?**

புவிக்கோளத்தில் பல்வேறு உயிரினங்கள் பல்வேறு தகவலமைப்பை பெற்று வாழ்கின்றன இதுவே உயிரினப் பன்மை எனப்படும்

**18. வணிகம் என்றால் என்ன?**

வணிகம் என்பது சேவைகளை வாங்கும், விற்கும் அல்லது பண்ட மாற்றம் செய்யும் செயல்முறை ஆகும்.

**19. எல்லையோர சாலையின் முக்கியத்துவம் யாது?**

1. எல்லையோரச் சாலைகள் நம் நாட்டின் வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

2. இது தேசிய வளர்ச்சிக்கும், தேசிய ஒற்றுமைக்கும்,தேசியப் பாதுகாப்பினை பராமாரிக்கும் ஓர் அடையாளச் சின்னமாக விளங்குகிறது.

**20. புற நகர் ரயில் போக்குவரத்து பற்றி குறிப்பு வரைக.**

1. புற நகர் இரயில்கள் புற நகர் பகுதி மக்களை நகரத்தோடு இணைக்கின்றது.
2. இது மும்பை, சென்னை, கொல்கத்தா மற்றும் டெல்லி போன்ற நகரங்களில் உள்ளது.
3. இவை பெரும்பாலும் மின்சார ரயில்களாகும்.
4. இது ஒன்பது பெட்டிகளை கொண்டிருக்கும்.

**21. தொலை நுண்ணுணர்வு என்றால் என்ன?**

புவியின் விபரங்களை தொலைவிலிருந்து சேகரிப்பது தொலை நுண்ணுணர்வாகும்.

**22. தொலை நுண்ணுணர்வின் பகுதிகள் யாவை?**

1. இலக்கு
2. ஆற்றல் முலம்
3. பிரதிபலிக்கும் வழி
4. உணர்வி

**23. உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதியின் பயன்கள் யாவை?**

1. நில அளவை, வரைபடம் வரைதல், கடல்வழி போக்குவரத்து, கைபேசி ஆகியற்றிற்கு பயன்படுகிறது.



WWW.TAMILAGAASIRIYAR.COM

2. ஏவுகனை, மீட்புபணி, எதிரி நாட்டின் ராணுவ பலம் ஆகியவற்றினை அறிய பயன்படுகிறது.

3. வர்த்தகம், அறிவியல் பயன்பாடுகள், பாதைகள், மேற்பார்வை போன்றவற்றிற்கும் இது பயன்படுகிறது.

**வேறுபடுத்துக :-**

| | மேற்கு தொடர்ச்சி மலைகள் | | கிழக்குத் தொடர்ச்சி மலைகள் |
|---|---|---|---|
| 1. | தொடர்ச்சியான மலைத்தொடர் | 1. | தொடர்ச்சியற்ற மலைத்தொடர் |
| 2. | மேற்கு கடற்கரைக்கு இணையாக செல்கிறது. | 2. | கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. |

**2.**

| **கீரின்விச் தீர்க்க நேரம்** | | **இந்திய திட்ட நேரம்** | |
|---|---|---|---|
| 1. | 0 இது 0°ஐ குறிககும் | 1. | இது 82°30’ ஐ குறிக்கும் |
| 2. | உலகின் திட்ட நேரத்தை கணக்கிட உதவுகிறது | 2. | இந்தியாவின் திட்ட நேரத்தை கணக்கிட உதவுகிறது. |

3

| **லூ** | | **நார்வெஸ்டர்ஸ்** | |
|---|---|---|---|
| 1. | இது வலிமையான வெப்பக்காற்று | 1. | இது இடியுடன் கூடிய தலக்காற்று |
| 2. | இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்கு பகுதிகளில் வீசும். | 2. | வடகிழக்கு இந்தியப் பகுதிகளில் வீசும் |

4

| **வானிலை** | | **காலநிலை** | |
|---|---|---|---|
| 1. | ஓர் இடத்தில் உள்ள வெப்பம் அழுத்தம், காற்று, ஈரப்பதம், மற்றும் மழைப் பொழிவு இவற்றின் அன்றாட நிலையைக் குறிப்பது ஆகும். | 1. | ஓரிடத்தின் நீண்ட நாளைய உண்மையான சராசரி வானிலையைக் குறிப்பது. இதனை அளவிட 35 வருட கால வானிலை தேவைப்படுகிறது. |

**5**

| **புதுப்பிக்க கூடிய வளங்கள்** | | **புதுப்பிக்க முடியாத வளங்கள்** | |
|---|---|---|---|
| 1. | மீண்டும் மீண்டும் புதுப்பிக்க கூடியது | 1. | பயன்பாட்டிற்கு பின் மீண்டும் புதுப்பிக்க இயலாது |
| 2. | உ-ம் சூரிய ஒள, காற்று, நீர் | 2. | உ-ம் நிலக்கரி, கச்சா எண்ணெய் |



WWW.TAMILAGAASIRIYAR.COM

6

| காற்று சக்தி | | அனல் மின் சக்தி | |
|---|---|---|---|
| 1. | புதுப்பிக்க கூடிய சக்தி | 1. | புதுப்பிக்க இயலாத சக்தி |
| 2 | காற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது | 2. | நிலக்கரி, பெட்ரோலியம் இயற்கை எரிவாயுவிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. |

7

| ஒரு பயிர் சாகுபடி | | இரு பயிர் சாகுபடி | |
|---|---|---|---|
| 1. | இது ஒரு போகம் எனப்படும் | 1. | இது இரு போகம் எனப்படும். |
| 2. | ஒரு பயிர் மட்டுமே விளைவிக்கப்படும் | 2. | இரண்டு பயிர்கள் விளைவிக்கப்படும் |
| 3. | எ.கா. தேயிலை, காப்பி, கரும்பு | 3. | எ.கா. கோதுமை, கடுகு. |

8

| இரும்பு எ∴கு தொழிற்சாலை | | மென் பொருள் தொழிற்சாலை | |
|---|---|---|---|
| 1. | இது கனிம வளம் சார்ந்த தொழிலகம் ஆகும். | 1. | இது கனிம வளம் சார்ந்த தொழிலகம் அல்ல |
| 2. | நம் நாட்டில் சோடா நாகபுரி வட்டாரத்தில் காணப்படுகின்றன. | 2. | நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களில் காணப்படுகிறது. |

9

| ஏற்றுமதி | | இறக்குமதி | |
|---|---|---|---|
| 1. | உபரிப் பொருட்களை வெளிநாட்டிற்கு விற்பது | 1. | தேவையான பொருட்களை வெளிநாட்டிலிருந்து வாங்குவது. |
| 2. | தேயிலை, காப்பி, சர்க்கரை முக்கிய ஏற்றுமதி | 2. | இயந்திரக் கருவிகள், பெட்ரோலியம், முக்கிய இறக்குமதி |

10

| வான்வெளிப்படங்கள் | | செயற்கை கோள் படங்கள் | |
|---|---|---|---|
| 1. | இது தொலை நுண்ணறிவு நுட்பத்தின் ஆரம்பமாகும். | 1. | செயற்கை கோள் மூலம் எடுப்பது. |
| 2. | ஏதிரி நாட்டின் நடமாட்டத்தை அறிய முடியும் | 2. | நாட்டின் கனிம வளத்தை அறிய முடியும் |



WWW.TAMILAGAASIRIYAR.COM

## விரிவான விடையளி

**1. வேற்றுமையில் ஒற்றுமை – விவரி**

I) இந்தியாவில் மிக உயர்ந்த மலைகளும், சிறிய சமவெளிகளும் காணப்படுகின்றன

II) இங்கு மாறுபட்ட காலநிலை நிலவுகிறது

III) பல்வேறு வகையானத் தாவரங்களும், விலங்குகளும் இங்கு காணப்படுகின்றது.

IV) பல கலாச்சாரங்களும், பல சமயங்களைப் பின்பற்றுகிற மக்களும் இங்கே காணப்படுகின்றனர்.

V) பல வேறுபாடுகள் இருந்தும் இந்தியக் கலாச்சாரம் நம் அனைவரையும் ஒன்று சேர்க்கிறது.

எனவே இந்தியா, வேற்றுமையில் ஒற்றுமை உள்ள நாடு என அழைக்கப்படுகின்றது.

**2. தென்மேற்குப் பருவக் காற்றின் ஏதேனும் ஒரு கிளையை விவரி:**

அரபிக்கடல் கிளை:

1. இக்கிளை அரபிக் கடலில் இருந்து வீசுகிறது.
2. ஈரப்பதமான இக்காற்று மேற்கு தொடர்ச்சி மலையின் மீது மோதி மேற்கு கடற்கரைச் சமவெளிக்கு அதிக கன மழையைக் கொடுக்கிறது.
3. இக்காற்றால் மும்பை கன மழையைப் பெறுகிறது
4. அதே நேரத்தில் தக்காண பீடபூமி மழை மறைவுப் பிரதேசமாக உள்ளது.
5. இதனால் புனே குறைந்த மழைப் பொழிவைப் பெறுகின்றது.

**3.காடுகளின் முக்கியத்துவத்தை விவரி:**

1. அரக்கு கோந்து, பிசின், தோல் பதனீட்டு பொருட்கள், மருந்துகள் கிடைக்கின்றன



WWW.TAMILAGAASIRIYAR.COM

2. அந்நிய செலவாணியை ஈட்டுகிறது
3. சுற்றுலா மையங்களாக விளங்குகின்றன
4. அந்நிய செலவாணியை ஈட்டுகிறது
5. காற்று மண் அரிப்பினையும், வெள்ளப் பெருக்கினையும் கட்டுப்படுத்தும்.
6. நிலத்தடி நீரின் அளவை பராமரிக்கிறது.

1. **காற்று மாசடைதல் பற்றி குறிப்பு வரைக**

தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்கள் வெளியேற அவை காற்றுடன் கலப்பதை காற்று மாசடைதல் என்கிறோம்

**காற்று மாசடைதலுக்குக் காரணங்கள்**

காற்று மாசடைதலை இயற்கையினால் மாசடைதல் மற்றும் மனிதர்களால் மாசடைதல் என இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

**இயற்கையினால் மாசடைதல்**

எரிமலை வெடிப்பு, காற்றரிப்பு, மகரந்தப் பரவல், உயிரிகளின் கூட்டுப் பொருள்கள் ஆவியாதலால் உண்டாம் வாயு மற்றும் அணுக்கதிர்வீச்சு போன்றவைகளால் காற்று மாசடைகிறது.

**மனிதர்களால் மாசடைதல்**

வாகனங்களிலிருந்து வெளியேறும் கார்பன், அனல்மின் நிலையங்களிலிருந்து வெளியேறும் கார்பன் புகை, தொழிலகங்கள் மற்றும் சுத்திகரிப்பு ஆலைகிளிலிருந்து வெளியேறும் கார்பன்.

**காற்று மாசடைதலின் விளைவுகள்**

- காற்றில் உள்ள மாசுக்களை சுவாசிப்பதன் மூலம் மனிதர்களுக்கு தீங்கு ஏற்படுகிறது.
- அத்துடன் நீர், உணவு மற்றும் தோல் மூலம் ஊடுருவி தொற்றுநோயை

உண்டாக்குகிறது.



WWW.TAMILAGAASIRIYAR.COM

# குடிமையியல்

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. இந்தியா அதிகப்படியான நம்பிக்கையைக் கொண்டிருப்பது **அமைதி**
2. பண்டித ஜவஹர்லால் நேருவின் அமைதிக்கான ஐந்து அம்ச கொள்கைகள் **பஞ்சசீலம்**
3. இன ஒதுக்கல் கொள்கை முடிவிற்கு வந்த ஆண்டு **1990**
4. தற்காலத்தில் மிகவும் பிரசித்த பெற்ற அரசாங்க முறை **மக்களாட்சி**
5. தேர்தலில் போட்டியிட தேவையான வயது **25**
6. தேர்தல் ஆணையம் அமைந்துள்ள இடம் **டெல்லி**
7. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட அவலக மொழிகள் **22**
8. தேம்பாவணியோடு தொடர்புடையது **கிறிஸ்துவ மதம்**
9. ஊலக நுகர்வோர் தினமாகக் கொண்டாடப்படுவது **மார்ச் 15**
10. ஒரு பொருளை முழுவதுமாக பயன்படுத்துவோர் **நுகர்வோர்**

## குறுகிய விடையளி தேர்ந்தெடு

**1. பஞ்ச சீலத்தின் ஐந்து கொள்கைகள் யாவை?**

- ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை மதிக்க வேண்டும்
- பிற நாட்டை தாக்கக் கூடாது
- மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது
- பிற நாடுகளுடன் நட்புறவை வளர்க்க வேண்டும்
- பிற நாடுகளுடன் அமைதியை கடைபிடிக்க வேண்டும்



WWW.TAMILAGAASIRIYAR.COM

**2. ஜனநாயகம் பற்றி ஆப்ரகாம்லிங்கன் கருத்து யாது?**

ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக, மக்களே, ஆட்சி செய்வது.

**3. தேசிய கட்சிகள் யாவை?**

தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தலில் 6சதவீதத்திற்கு மேல் வாக்குகளைப் பெறும் கட்சி தேசியகட்சி எனப்படும் (எ.கா) காங்கிரஸ் பா.ஜ.க.

**4. இந்தியாவில் உள்ள சமயங்களை குறிப்பிடுக?**

இந்து மதம், கிறிஸ்துவ மதம், ஜொராஸ்டிரிய மதம், இஸ்லாம் மதம், புத்த மதம், சமண மதம், சீக்கிய மதம்,

**5. தேர்தல் ஆணையத்தின் பணிகள் பற்றி சுருக்கமாக குறிப்பு தருக.**

1. அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளிப்பது.
2. அரசியல் கட்சிகளுக்கும், தனி வேட்பாளர்களுக்கும் சின்னங்களை ஒதுக்குவது.

## விரிவான விடையளி

1. **சார்க் அமைப்பு:**

- சார்க் என்பது தெற்கு ஆசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு.
- முதல் கூட்டம் டிசம்பர் 7, 1985 ஆம் ஆண்டு வங்காளத்தின் தலைநகர் டாக்கா நகரில் நடைபெற்றது.
- வங்காளத்தைச் சேர்ந்த ஆஷான் சார்க் அமைப்பின் முதல் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார்.
- வங்காளதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான் ஆகிய 8 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன..
- பூடான் தலைநகர் திம்புவில் சார்க் அமைப்பின் 16வது மாநாடு நடைபெற்றது.
- சார்க்கின் உறுப்பு நாடுகள் தங்களுக்குள் பரஸ்பர நல்லுறவின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன.

2. தேர்தல் முறைகளைப் பற்றிக் குறிப்பிட்டு அவற்றைப் பற்றி விளக்கம் தருக?

**நேரடித் தேர்தல் முறை:**

- குடிமக்கள் தாங்களே நேரடியாக வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை நேரடித் தேர்தல் முறையாகும்.

**மறைமுகத் தேர்தல் முறை:**

- குடிமக்கள் நேரடியாக தங்களது வாக்குகளை செலுத்தாமல் தங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு உறுப்பினர்களைத் தேர்வு செய்வது.

**இடைத்தேர்தல்கள்:**

- சில சமயங்களில் ஏதாவது ஒரு தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் மரணமடையலாம். அல்லது பதவியை விட்டு விலகலாம்.
- அத்தகைய சூழ்நிலையில் அந்தத் தொகுதியில் மட்டும் நடைபெறும் தேர்தல்களுக்கு இடைத்தேர்தல்கள் என்று பெயர்.

**இடைப்பருவத் தேர்தல்கள்:**

சில சமயங்களில் நாடாளுமன்றமோ அல்லது மாநில சட்ட சபைகளோ அது செயல்படுவதற்குரிய ஆண்டுகள் முழுமையும் செயல்பட் முடியாது பல்வேறு காரணங்களால் இடையில் கலைக்கப்பட்டால் மீண்டும் அவற்றுக்குத் தேர்தல் நடத்தப்படும். இதற்கு இடைப் பருவத் தேர்தல்கள் என்று பெயா

**3. தேசிய ஒருமைப்பாடு பற்றி எழுதுக?**

- தேசிய சின்னங்கள் தேசியக்கொடி மற்றும் தேசிய கீதம், போன்றவை தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன.
- ஒன்றுப்பட்டால் வாழ்வு, பிரிந்தால் வீழ்ச்சி என்ற உணர்வு இந்திய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கிறது.
- மனிதாபிமானம், சமய உணர்வு, சகோதரத்துவம், நட்பு, அனைத்து மதத்தையும் சகித்துக் கொள்ளும் தன்மை போன்றவை இந்தியர்கள் ஒற்றுமை மற்றும் சகோதர ஒருமைப்பாட்டுடன் வாழ வழி செய்கின்றன.
- அனைவரும் பாரத் தாயின் பிள்ளைகள், சகோதர சகோதரிகள் என்ற எண்ணம் இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்க பெரிதும் உதவுகின்றன.

**5. நுகர்வோரைப் பாதுகாக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?**

- கல்வி நிறுவனங்களில் நுகர்வோர் கழகங்கள் அமைத்தல்.
- கிராமப்புறங்களில் நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வை சுய உதவிக்குழுக்குளின் மூலம் ஏற்படுத்துதல்
- நகர்ப்புறங்களில் குடியிருப்பு நல சங்கங்களின் மூலம் தெரிவித்தல்
- வானொலி தொலைக்காட்சி மற்றும் குறும்படங்களின் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

# பொருளியல்

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. முதன்மைத் துறை என்று **வேளாண்மைத் துறை**
2. தலா வருமானம் கட்ழக் காட்டுகிறது **மக்களின் வாழ்க்கை தரத்தை**
3. நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் வழிமுறைகள் **3 முறைகள்**
4. இந்தியத் திட்டக் குழுவின் தலைவர் **பிரதமர்**
5. பசுமைப்புரட்சி நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு **1967**
6. பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர் **ஆச்சார்ய வினோபாவே**

## குறுகிய விடை

1. **நாட்டு வருமானத்தை வரையறு**

நாட்டு வருமானம் என்பது ‘ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பின் அளவு ஆகும்.

2. **தலா வருமானம் என்றால் என்ன?**

தலா வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை



WWW.TAMILAGAASIRIYAR.COM

3. **நிகர உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?**

நிகர உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானச் செலவு

4. **கலப்புப் பொருளாதாரம் என்றால் என்ன?**

பொதுத் துறை நிறுவனங்களும், தனியார் துறை நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதை கலப்பு பொருளாதாரம் என்கிறோம்.

எ.கா இந்தியா

5. **தனியார்மயமாதல் என்றால் என்ன?**

பொதுத் துறை நிறுவனங்களை தனியார் உடமையாக்குவதே தனியார் மயமாதலாகும்.

6. **உலகமயமாதல் - சிறு குறிப்பு வரைக:**

ஒரு நாட்டின் அங்காடியை பன்னாட்டு அங்காடியுடன் தொடர்புபடுத்துவதே உலகமயமாதலாகும்.

7. **தமிழ்நாடு அரசின் ஏதேனும் நான்கு நலத் திட்டங்களை எழுது?**

வருமுன் காப்போம் திட்டம்

பள்ளி நல வாழ்வுத் திட்டம்

உழவர் சந்தை திட்டம்

அவசரகால ஊர்தி 108.

## விரிவான விடையளி

**1. நாட்டு வருமானத்தை அறிவதன் அவசியம் யாது?**

- ஒரு நாட்டின் பொருளாதார செயல்பாடுகளின் நிலையைக் கணக்கிட
- ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அறியப் பயன்படுகிறது.
- ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் போக்கை தெரிந்துகொள்ள
- மற்ற நாடுகளின் நாட்டு வருமானத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்க
- முதன்மைத்துறை இரண்டாம் துறை மற்றும் பணிகள் துறைகளின் பங்களிப்பினை அறிய
- பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க வேண்டி அரசு கொள்கைகளை வகுக்கவும் திட்டமிடவம் பயன்படுகிறது.



WWW.TAMILAGAASIRIYAR.COM

**3. நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகளை விவரி**

ஒரு நாட்டின் நாட்டு வருமானத்தை கீழ்க்கண்ட முறைகளில் கணக்கிடலாம்

**உற்பத்தி முறை:**

- நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் ஒட்டு மொத்த மதிப்பை கணக்கில் எடுத்துக் கொண்டு இம்முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.

**வருமான முறை:**

- நாட்டில் உள்ள அனைத்து மக்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

**செலவின் முறை:**

- மக்களின் நுகரும் பொருட்களுக்கான செலவு, சேமிப்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

**4. பதினோறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களை விவரி?**

- நீர்ப்பாச வசதிகள், கிராமங்கள் மின்மயமாதல் மற்றும் கிராமச் சாலைகளை மேம்படுத்த அரசு மூதலீட்டை அதிகரித்தல்
- மின்சாரம் மற்றும் உரங்களுக்கான மானியத்தைக் குறைத்தல்
- வேளாண் ஆராய்ச்சியை ஊக்கப்படுத்துதல்
- சுற்றுச் சூழல் பாதுகாப்பை உறுதி செய்தல்
- வேலை வாய்ப்புகளை விரிவாக்குதல்
- கிராமப்புற கட்டமைப்பு வசதிகளை பெருக்குதல்
- வறுமையை ஒழித்தல்
- தொடக்கக் கல்வியில் இடை நிற்றலைக் குறைத்தல்

**5. பசுமைப் புரட்சியை விளக்குக**



WWW.TAMILAGAASIRIYAR.COM

- இந்தியாவில் பசுமைப்புரட்சி 1967 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது

- நிலச் சீர்திருத்தம், அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பாசன வசதிகளைப் பயன்படுத்தி உணவுப் பொருட்கள் உற்பத்தியைப் பெருக்குவதே இதன் நோக்கமாகம்.

- இச்செயல்முறையை இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் அறிமுகப்படுத்தியது

- பசுமைப் புரட்சியின் விளைவாக இந்தியாவின் பெரும்பான்மையான மாநிலங்களில் உணவு உற்பத்தி அதிகரித்தது.

- இதனால் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்தது.



WWW.TAMILAGAASIRIYAR.COM

# பத்தாம் வகுப்பு

# சமூக அறிவியல்

**TEAM LEADER**

1. MR. H. ARMSTRONG, B.T., A.H.M.,
   ST. JOSEPH'S COLLEGE HR.SEC. SCHOOL,
   TIRUCHIRAPPALLI – 620 002.
   MOBILE NO: 9944974179.

**MEMBERS**

1. MR. T.S. SRI RAMA MOORTHY, B.T., A.H.M.,
   VEERARAGAVAR HR. SEC. SCHOOL
   THANJAVUR – 613 009.
   MOBILE NO: 9894089793.

2. MR. T. SESURAJ, B.T., ASST.,
   R.C.HR.SEC.SCHOOL,
   TIRUCHIRAPPALLI – 620 001.
   MOBILE NO: 9943466830

3. MR. M. NAGA SUNDARAM, B.T., ASST.,
   E.R.HR. SEC. SCHOOL,
   TIRUCHIRAPPALLI – 620 002.
   MOBILE NO: 9786420016

4. MRS. M. CHRISTINAL, B.T., ASST.,
   METHODIST GIRL'S HR. SEC. SCHOOL,
   WORAIYUR, TIRUCHIRAPPALLI - 620 003.
   MOBILE NO: 9442342205

5. MR. T. VICTOR MANOHAR, B.T., ASST.,
   GOVT. HIGH SCHOOL,
   NARASIMMA NAICKEN PALAYAM,
   COIMBATORE – DISTRICT.
   MOBILE NO: 9443044878.

6. MR. K. SIVA PRAKASAM, B.T., ASST.,
   A.N.M. GOVT. HIGH SCHOOL,
   MUGASIPUDUR, OLAGADAM – 638 314.
   ERODE - DISTRICT.
   MOBILE NO: 9443399886.

# கட்டகப் பதிவேடு

| | வரலாறு | குடிமையியல் | புவியியல் | பொருளியல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஒரு மதிப்பெண் | 4 | 3 | 4 | 2 | 14 |
| இரண்டு மதிப்பெண் | 8 | 2 | 8 | 2 | 10 |
| ஐந்து மதிப்பெண் | 5 | 5 | 5 | 5 | 20 |
| பொருத்துக | 5 | - | 5 | - | 10 |
| தலைப்பு வினாக்கள் | 8 | - | - | - | 8 |
| வேறுபடுத்துக | - | - | 8 | - | 8 |
| காலக்கோடு | 5 | - | - | - | 5 |
| வரைபடம் | 5 | - | 10 | - | 15 |
| மொத்தம் | 41 | 10 | 409 | 9 | 100 |

## ஒரு மதிப்பெண் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | 14 |
| 2. | பொருத்துக | 10 |
| 3. | தலைப்பு வினாக்கள் | 8 |
| 4. | காலக்கோடு | 5 |
| 5. | வரலாறு வரைபடம் | 5 |
| 6. | புவியியல் வரைபடம் | 10 |
| | மொத்த ஒரு மதிப்பெண்கள் | 52 |

### மாணவர்கள் படிக்க வேண்டிய பகுதிகள்

| | | |
|---|---|---|
| 2. | குறுகிய விடை (10x2) | 20 |
| 3. | வேறுபடுத்துக (4x2) | 8 |
| 4. | விரிவான விடை (4x5) | 20 |
| | | 48 |

# பொருளடக்கம்


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | வரலாறு | 1 |
| 2. | புவியியல | 18 |
| 3. | குடிமையியல் | 27 |
| 4. | பொருளியியல் | 30 |
| 5. | வரலாறு வரைபடம் | 33 |

பொதுத்தேர்வு வினாத்தாட்கள் (ஏப்ரல் மற்றும் ஜுன் 2012)